ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1860/8 - 2014 අප්‍රේල් මස 30 වැනි බදාදා - 2014.04.30

*1860/8 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்

கட்டளை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 9அ பிரிவின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு உள்ளூராட்சி , மாகாண சபைகள் அமைச்சர் ஏ. எல். எம். அதாஉல்லா ஆகிய நான், 1987 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதிய 453/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதான ஆலையடிவேம்பு பிரதேச சபையின் அமைத்துருவாக்கம் சம்பந்தமான கட்டளையை, தெளிவுபடுத்துவதற்காக அதன் அட்டவணையின் பாகம் II இனை நீக்கி அதற்குப் பதிலாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.*

ஏ. எல். எம். அதாஉல்லா,
உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு,
கொழும்பு,
2014, ஏப்பிறல் 25.

**அட்டவணை**

பாகம் - II

பிரதேச சபையின் நிர்வாக எல்லைகள் :

வடக்கு : தமண பிரதேச சபையின் கிழக்கு எல்லையும் கருப்பாவெளி வாய்க்காலும் சந்திக்கும் புள்ளியிலிருந்து கிழக்கு நோக்கி கருப்பாவெளி வாய்க்காலினூடாக நீத்தையாறு வரைக்கும் அங்கிருந்து வடக்கு நோக்கி ஆனைவிழுந்தான் கட்டு வழியே சென்று, அங்கிருந்து வடமேற்காக PK 13 கால்வாய் வழியே PK பிரதான கால்வாய் வரைக்கும் சென்று அங்கிருந்து கிழக்கு நோக்கி PK 14 கால்வாயினூடாக RB 31 கால்வாய் வரைக்கும் சென்று, கிழக்கு நோக்கி RB 31 கால்வாய் வழியே தில்லையாறு வரைக்கும் சென்று, அதிலிருந்து வடக்கு, கிழக்காக தில்லையாற்றின் மத்திய கோட்டினூடாக பட்டியடிப்பிட்டி பாலம் வரைக்கும், அங்கிருந்து கிழக்காக அக்கரைப்பற்று 21, 19 கிராம அலுவலர் பிரிவின் தென் எல்லையினூடாகவும்

அக்கரைப்பற்று அம்பாறை வீதியினூடாகவும் அக்கரைப்பற்று மாவட்ட வைத்தியசாலையின் தென்மேற்கு மூலை வரைக்கும் சென்று, அங்கிருந்து அக்கரைப்பற்று மாவட்ட வைத்தியசாலையின் மேற்கு, வடக்கு, கிழக்கு எல்லைகளினூடாக அம்பாறை அக்கரைப்பற்று வீதி வரைக்கும், அங்கிருந்து கிழக்காக அம்பாறை அக்கரைப்பற்று வீதியின் மத்திய கோட்டினூடாக முதலியார் வீதி சந்தி (சின்ன சந்தி) வரைக்கும் அங்கிருந்து வடக்கு நோக்கி முதலியார் வீதியில் மத்திய கோட்டினூடாக தோம்புதோர் வீதி வரைக்கும் அங்கிருந்து கிழக்கு நோக்கி தோம்புதோர் வீதி, இஸ்மாயில் ஸ்டோர் வீதியின் மத்திய கோட்டினூடாக கல்முனை அக்கரைப்பற்று வீதி வரைக்கும், அங்கிருந்து தெற்கு நோக்கி கல்முனை அக்கரைப்பற்று வீதியினூடாகவும் அக்கரைப்பற்று சாகாமம் வீதியின் மத்திய கோட்டினூடாகவும் சென்று அக்கரைப்பற்று பஸ் நிலையத்தின் தென்மேற்கு மூலை வரைக்கும் அங்கிருந்து அக்கரைப்பற்று பஸ் நிலையத்தின் தெற்கு, கிழக்கு எல்லைகளினூடாக அக்கரைப்பற்று பொத்துவில் வீதி வரைக்கும், அங்கிருந்து கிழக்கு, தெற்கு நோக்கி அக்கரைப்பற்று பொத்துவில் வீதியின் மத்திய கோட்டினூடாக அக்கரைப்பற்று பொது இடுகாட்டின் வடக்கு எல்லை வரைக்கும், அங்கிருந்து கிழக்காக அக்கரைப்பற்று பொது இடுகாட்டின் வடக்கு எல்லையினூடாக கடற்கரை வரைக்கும்.

கிழக்கு : இறுதியாக கூறப்பட்ட புள்ளியிலிருந்து கடற்கரை ஊடாக சின்னமுகத்துவாரம் நீரிடைப்பாதையில் மத்திய புள்ளி வரைக்கும்.

தெற்கு : அந்த மத்திய புள்ளியிலிருந்து அக்கரைப்பற்று சாகாமம் வீதியின் ஏழாம் மைல் கல் வரையும் களப்புக்கு குறுக்கே தென்மேற்கு நோக்கிச் சென்று அந்த ஏழாம் மைல் கல்லிலிருந்து தாலி போட்டாறு திரும்பும் இடம்வரை சென்று, அங்கிருந்து தாலி போட்டாறு ஊடாக அளிக்கம்பை சந்தி வரைக்கும்.

மேற்கு : இறுதியாக கூறப்பட்ட புள்ளியிலிருந்து வடமேற்கு நோக்கி தமண பிரதேச சபையின் கிழக்கு எல்லையினூடாக கருப்பாவெளி வாய்க்கால் வரைக்கும்.

5- 422

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.